RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s527

OPEN ACCESS

# கவிஞர் மீராவும் திராவிடக் கருத்தியலும்

**ஆ. சுதாகர் [அ, *], ச. சேதுகல்பனா [ஆ]**

[அ] தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, சிவகங்கை-630003, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுவயல், சிவகங்கை- 630108, தமிழ்நாடு, இந்தியா.

# Meera the Poet and Dravidian Ideology

**A. Suthakar [a, *], S. Sethu Kalpana [b]**

[a] Department of Tamil, Alagappa University, Karaikudi, Sivagangai-630003, Tamil Nadu, India

[b] Department of Tamil, Vidhyaa Giri College of Arts and Science, Puduvayal, Sivagangai-630108, Tamil Nadu, India

* Corresponding Author: asuthakarsasikala@gmail.com

Received: 03-08-2021
Revised: 19-06-2022
Accepted: 01-07-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

Poet Meera is an eloquent and conceptual interpreter, who uses simple words to polish profound ideas into her poetic wit. Poet Meera is a poetess who added beauty to Mother Tamil. Ever since her childhood, she had an insatiable love for poetry and poets, and to that extent the Dravidian Kazhagam worshipped the rationalists of the Dravidian movement like Periyar, Anna and Kalaignar. She was born to restore human society like a Sivagangai Seeman. This article explains the human feelings, progressive thoughts, the words she wanted to say emphatically and deeply, poems and essays by aligning them with Dravidian principles.

**Keywords:** Poem, Ideology, Poet Meera, Dravidian Kazhagam

## முன்னுரை

எழுத்தும் தன் வாழ்வும் ஒன்று என்று வாழ்ந்தவர்களே மக்கள் எழுத்தாளர்கள். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிரதான உலக இலக்கிய வரலாறு காட்டும் தீரச் சித்திரங்கள் இவர்தம் முகங்களே! மக்கள் வாழ்வில் சிக்கலான தருணங்களில் இத்தகையோர் பேனா, வலிமைமிக்க பேராயுதமாக மாறும். இடம் வலம் எனப் பேதமுறாது போராட்டக் களங்களில் தானாகப் பங்கேற்று முன் நின்றவர் கவிஞர் மீரா. பொது நலனுக்கு எழுதுதலும் அதற்கான ஜனநாயக ரீதியான போராட்டங்களும், மீராவின் மாணவப் பருவத்திலேயே அவர் மனத்தில் படிந்தவையாம்.

பக்த மீராவைப் பாரதத்திற்கு மறு அறிமுகம் செய்வித்தவர் அண்ணல் காந்தி. நம் கவிஞர் மீராவைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தவர் அறிஞர் அண்ணா. கல்லூரி மாணவர் மீரா கவிஞர் மீரா என்று அண்ணாவின் வாய் வழி அறிப்பட்டதும், அக்கால மேடைகளில் சங்கப்புலவர்களோடு புரட்சிக்கவி பாரதிதாசனோடு மீராவும் மேற்கோள் ஆனவர். மீரா தான் மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்களையும் கைதூக்கி மேலெழச் செய்த காவியத் தலைவன் அதனால் இவரை 'கவிஞர்களின் சரணாலயம்' என்பார் கவிஞர் தமிழ்நாடன். அவ்வகையில் கவிஞர் மீராவின் பொதுவாழ்வில் திராவிடக் கருத்துக்கள் கலந்த செய்தியை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திராவிடப் போராளி கவிஞர் மீரா

ஈரோடு கண்டெடுத்த தங்கம், காஞ்சி கற்கண்டு, திருக்குவளை தந்த தேவர் மகன் வழி பகுத்தறிவைத் தேவைக் கதியமாய்த் தன் தேகங்களில் தேக்கிக் கொண்டவர். சிறுவயது முதல் எழுபது தொடக்கம் வரை திராவிட இயக்கத்தில் ஒன்றிருந்தார். அதற்குக் காரணம் அண்ணாவைப் போல பாவேந்தர் பாரதிதாசனும் மற்றொரு காரணம். அவரது கவிதைகளைப் படித்து சுவைத்த நெஞ்சம் அவரை போலவே திராவிட இயக்கப் பாடல்களை புனையலானார். திராவிட நாடு, திராவிடன், முரசொலி, தென்றல், இனமுழக்கம், மன்றம் முதலிய பத்துக்கும் மேற்பட்ட திமுக இதழ்களில் தம் கவிதைகளை எழுதி வெளியிட்டவர். திராவிட இயக்கக் கவிஞர்கள் என்று அண்ணா சிலர் பெயர்களைப் பட்டியலிட்டார். அதில் மீரா பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது (Meera, 2019).

இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு, தனித்திராவிட நாடு, தமிழ் மறுமலர்ச்சி, சாதி மத ஒழிப்பு, கடவுள் மறுப்பு, சமூக சீர்திருத்தம், சமத்துவ சமுதாயம், கலப்புத் திருமணம் முதலியவை கவிஞரின் பாடுபொருள்களாக அமைந்தன. அந்த நாளில் திராவிட இயக்கம் சார்ந்த ஒவ்வொரு தமிழர் நலச் செயல்பாட்டிலும் அவர் கலந்திருந்தார். பின்னர் பொது உடைமை இயக்கங்களிலும் மக்கள் உரிமைப் போராட்டங்களிலும் முன் நின்றவர். மீரா ஓர் ஊமை அறிவு ஜீவி அல்ல; மக்கள் நலனுக்காக உரிமைக்காக உரத்த குரல் கொடுத்த அறிவுப் போராளி.

## முற்போக்கு சிந்தனையாளர்

கல்லூரி காலத்தில் கவிஞர் சுரதா தலைமையில் ‘கடவுள்’ என்ற தலைப்பில் இங்கர்சால், பெரியாரைப் படித்துவிட்டு அவர்கள் பாணியில் கடவுளை விமர்சனம் செய்து 12 எண் சீர் விருத்தங்கள் பாடிய கவிஞர் மீராவைக் கண்டு கழகப் பித்தர்கள் கைகுலுக்கினர். கவிஞர் மீரா கடவுள் மறுப்பு என்பதில் தீவிரம் காட்டவில்லை. ஓம் நமச்சிவாய சொல்லுங்கள் என்பதில் தான் எதிர்ப்பாய் இருந்தார். இவருக்கு நீரிழிவு, வாதநோய், இதய நோய் வந்த போது திராவிடக் கழகத் தலைவர் திரு.கி. வீரமணி கொடுத்த பெரியார் விருதுதான் அவர் படுக்கையருகே இருந்ததாம்.

பெரியார், அண்ணா, கலைஞர் கொள்கை வழி வந்ததால் கடைசி வரை பகுத்தறிவுவாதியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். கலைஞர் தம் பிள்ளைகளுக்குக் கலப்பு மணம் செய்வித்தார். கவிஞர் முடியரசன் தம் எல்லாப் பிள்ளைகளுக்கும் வேறு சாதியில் திருமணம் செய்வித்தார். ஆனால் கவிஞர் மீராவோ தன் மூன்று பிள்ளைகளுக்கும் சாதி மட்டுமல்ல, மதமும் மொழியும் கடந்து திருமணம் செய்வித்தவர். திராவிடக் கொள்கைகளைக் கேட்டதோடு, படித்ததோடு நில்லாமல் தானும் தன் குடும்பமும் ஓர் முன்மாதிரியாக காலக்கண்ணாடியாகத் திகழ வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்திருக்கிறார் (Meera, 2019). அதற்கு திராவிட இயக்கம் இவரை ஓர் சீர்திருத்தவாதியாகவும், முற்போக்குச் சிந்தனையாளராகவும், மனிதாபிமானியாகவும் கொண்டு சென்றுள்ளது.

## மீராவும் திராவிடக் கொள்கைகளும்

கவிஞர் மீராவின் (இராஜேந்திரன்) கவிதைகளைப் படித்தவர்கள் இவர் ஒரு திராவிட இயக்கக் கவிஞன் என்றும், பாரதிதாசனின் வாரிசு என்றும் குறிப்பிட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கவிஞராகவும், உறுப்பினராகவும் இருந்துள்ளார். 1967 தேர்தலில் திராவிடக் கழகத்திற்காக இலை மறைவு, காய் மறைவு அல்ல, தலை மறைவு கூட்டம் நடத்தியவர். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி ‘மன்றம்’ இதழில் தம் பொருளாதாரக் கட்டுரைகளை எழுதி கொண்டிருந்த நாவலரின் இளவல் திரு. இரா. செழியனை அழைத்து நகரத்தின் காந்திபூங்கா ஆலமரத்தின் அடியில் தொடக்க விழா நடத்தியவர். கல்லூரியில் படித்தபோது தோழர் ஜீவாவையும், பேராசிரியராக இருந்த போது தந்தை பெரியாரையும் தம் கல்லூரிக்கு அழைத்து பேச வைத்த பெருமைக்குரியவர்.

இப்படி திராவிட இயக்கத்தில் திமுக பொதுவுடைமை சிந்தனைவாதியாக தன்னை செதுக்கிக் கொண்டவர். அண்ணாவை தம் கவிதைகளில் புகழ்ந்து பாடியது போல் தோழர் ஜீவாவையும் பாடியுள்ளார். பொங்கலைப் போற்றியது போல மே தினத்தையும் கொண்டாடியவர்.

தமிழ், பொதுவுடைமை, சமுதாயச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், இவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். பாட்டாளி வர்க்கத்தின் குருதியைக் கொதிக்க வைத்து, நரம்புகளை முறுகேற்றி ஆணவங் கொண்டோர்க்கு எதிராக அரும்படை திரட்டிப் பெரும் போர் தொடுக்கப் புறப்பட்டவர் (Meera, 2019).

"மனிதனாய் மாறு; மாற்று உன் சக்தியை

செத்த பிணத்தைக் கொத்துங் கழுகினும்

கொடியதோர் உள்ளத்தைக் கொலை செய் இதோ வாள்!

கயமையைக் கைது செய்; கடுந்தண்டனை கொடு!

'எல்லாம் எனக்கே' என்பதினிமேல்

எத்தர் ஏற்புரை இழிசினர் வழக்கு

முதலாளித்துவ முதுகெலும் பைமுறி

பாடுபடு வோர்க்கே பாரெனப் பாடு

சமத்துவச் சங்கொலி செய்து

சமைத்திடு தம்பி புதியதோர் தரணியே"

என்று

சமுதாயத்தில் ஏற்படும் தாழ்வும் - ஏணியும் கேணியும், மேடும் பள்ளமும் இருப்பின் அதைத்தகர்த்தெறி; புறப்படு என்ற உணர்ச்சியை எழுப்பியும் திராவிட இயக்கக் கொள்கைகளை தம் கவிதைகளில் தடம் பதித்தவர் (Meera, 2019).

## திராவிடக் கருத்தாளர்களின் வழி மீரா

மீராவின் 'தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்' என்ற வரி அறிஞர் அண்ணாவால் 'திராவிட நாடு' ஏட்டில் இருமுறை மேற்கோள் காட்டியுள்ளார். 'பொங்கல் கொண்டாட வேண்டும்' என்ற வரியையும் குறிப்பிட்டுள்ளார். திருச்சியில் நடந்த திமுக மாநாட்டுக்குத் தொண்டர்களை அழைத்து எழுதிய கடிதத்தில் சாவா சந்திப்போம்; வாழ்க்கை நமக்கென்ன, பூங்கா புறப்படுவோம்; புல்லியரைத் தூள் செய்வோம்' என்ற வரி மூன்றும் ஆறும் கவிதையை அறிக; அண்ணா குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

அண்ணாவின் கடைசி உயில் என்று அழைக்கப்பட்ட தம்பிக்கு எழுதிய கடைசி கடிதத்தில் மீராவின் கவிதைகளை மேற்கோள் காட்டும் அளவிற்கு அண்ணாவின் நெஞ்சில் இடம்பிடித்தவர் மீரா.

"மூன்றெழுத்துக் "குறள்" நூலை உலகுக்கீந்த,

மூன்றெழுத்துத் "தமிழ்" மொழியை பேணிக்காக்க

மூன்றெழுத்துப் பகை "இந்தி" ஆதிக்கத்தை

முறியடிக்க முதுகெலும்பை ஒடிக்க"

தோன்றியத் தலைவர் அண்ணாவைப் போல் தன் குரலை ஓங்கி ஒலித்தவர் (Meera, 2019).

தமிழ்மொழியோடும் தமிழர் வரலாற்றோடும் இவரின் கவிதைகளில் நனைந்த டாக்டர் கலைஞர் அவர்கள் இவருக்கு 'கவிக்கோ' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்கள். மீரா, கலைஞரை 'நீ லெனினைப் போல் புரட்சித் தலைவனாக வேண்டும்' என்று பாடினார்.

மீரா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டு இருந்தாலும் கூட "முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைஞர் என்னை அறிவார் என்றாலும், அவருக்கும் எனக்கும் பெரிய

நெருக்கம் இல்லை. தூர இருந்தே கலைஞரையும், பேராசிரியரையும் மதிப்பவன் நான்” என்று கூறியிருக்கிறார்.

திமுக ஆட்சிக்கு வருமுன்னும் வந்த பின்னும் ஆரேழு கவியரங்குகளில் கலைஞர் கவிதை பாடியவர் கவிஞர் மீரா திசைமாறிய பறவையான பிறகும் இவரை வாழ்த்தியவர் கலைஞர் கருணாநிதி. எப்படித் தெரியுமா ‘எங்கள் வண்டலில் விளைந்த பயிர் மீரா, எங்கிருந்தாலும் வாழ்க’ என வாழ்த்தியவர்.

போர்க்களத்தில் ஒடிந்த வாளுமின்றி நின்ற அபிமன்யு போல் இருந்த கவிஞரையும் தம் ஆசிரியர் இனத்தையும் காப்பாற்றிய பெருமைக்குரியவர். ஓவியர்களுக்கு அமைந்துள்ள சோழமண்டலம் போல் கவிஞர்களுக்காக ஒரு கவிதாமண்டலத்தை மகாபலிபுரத்தில் உருவாக்கித் தந்த பெருமை திராவிடக் கழகத்திற்குச் சேரும் என்பார் (Meera, 2008).

## கவிஞர் மீராவும் சமுதாயச் சீர்திருத்தமும்

கவிஞர் மீரா தான் படிக்கின்ற நாட்களிலே கலை, இலக்கியம், அரசியல் என பல தளங்களில் கால் பதித்தவர். கல்லூரி நாட்களில் இவரை கழக கவிஞர் என்றே அழைப்பர். அன்றைய இளம் நண்பர்களை ஒன்றுதிரட்டி இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவியவர். இலக்கியம், இலக்கிய வட்டடம், இலக்கியம் சார்ந்த பேச்சு, நிகழ்ச்சிகள் என தம் வகுப்புத் தோழர்களுடன் இணைந்து இனமுழக்கம், திராவிடம், மன்றம் போன்ற இதழ்களில் கவிதை எழுதி வந்தவர். கனவுகள் + கவிதைகள் = காகிதங்கள் கவிதை மூலம் இளைஞர்கள் பலரை கவிதை எழுத, வாசிக்கத் தூண்டியவர். பொய் முகங்களின் அரிதாரங்களில் இவரது ஊசிகள் ஊடுருவிப் பாய்ந்தன. இலக்கிய உப்பரிகையில் உலாவுவதை விடச் சமுதாய நடைப் பாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாக கருதுகிறேன் என்று கூறியுள்ளார் (Meera, 2008). சமுதாயத்தில் நடக்கும் பலதரப்பட்ட பிளவுகளை ஊசிகளால் தைக்க வேண்டும் என்று விரும்பியவர். மீராவின் ஊசிகள் சிலரை குறிப்பிட்டு குத்துவதாக இருக்கும். ஆனால் கருத்து யாரையும் குறிப்பிடும். மண் என்றாலும் தேசம் என்றாலும் மக்கள்தான். சமூகத்தை புணரமைப்பது சமூகத்தை மாற்றுவது, அவலங்களை அம்பலப்படுத்துவது சமூக நீதிகளை தட்டிக் கேட்பது என திராவிடக் கொள்கைகளை முன்னிருத்தி இவரது கவிதைகள் அமைந்திருக்கும். எல்லாம் மாறுகிற காலமிது (Meera, 2008). மேலும், தமிழ்ப்பற்று கவிதையில்

“ஜாதி வேண்டும் என்றால் பொறுமையாய்

இருக்க முடியாது என்னால்

சாதியாய்ச்

சாதி வேண்டும் என்றே சாற்றும்...”

என்றும்,

சிவப்பு நாடா கவிதையில்,

நிர்வாகத் தோட்டத்தில்

நீருற்றத் தவறும்

அதிவீர வர்க்கத்தின்

அலட்சியப் போக்கால்

நாங்கள்

நட்டுவைத்த நல்ல லட்சியம்

பட்டுப்போவதைப்

பார்க்கிறோம்...

என சமுதாய அவலங்களையும் சுட்டிக்காட்டியுள்ளார் (Meera, 2019).

ஆயிரம் தீபங்களை ஏற்றிய ஆரத்தி தீபம் பல தலைமுறைகளுக்கு வெளிப்படுத்தும் அந்தத் தீப ஒளி எத்தனை சூரியர்களை நாளைக்கு எழுப்புமோ! யாருக்குத் தெரியும்?

"கோபுரப் புயல்

சாய்ந்தன சரிந்தன

கோடி மரங்கள்

தப்பின

சில கொடி மரங்கள்"

என இயற்கை அழிவுக்கும் வாழும் துயருக்கும் தன் கவிதைகளில் கோல் ஊன்றியவர் (Meera, 2009).

"யாரோ வைத்த நெருப்பால்

ஏழைக் குடிசைகள் எரிந்தன

வளரும் புகையில்

மாளிகை சில தெரிந்தன (குக்கூ)

என்று எரிப்பு எரிவதிலும் ஓர் புது அர்த்தங்களால் புதுயுகம் கண்ட கவிஞர்

'தாய்மொழியைக் காப்பதற்கும் தன்மானம் காப்பதற்கும்

நல்லவர்கள் தீக்குளித்து நாடாண்ட

தேசமிது"

என சமுதாயத்தின் மீதும் திராவிடக் கருத்தியல்களும் மீதும் தீராதப் பற்றுக் கொண்டு வாழ்ந்தவர் (Meera, 2019).

## முடிவுரை

கவிஞர் மீரா திராவிட இயக்க இளையத் தலைமுறைக்கு ஆதரவு, புதிய வரவுக்கு ஓர் வரவேற்பு. சொல்லழகும் கருத்தழகும் நிரம்பிய மொழிப்பற்றாளர், எளியச் சொற்களைக் கொண்டு ஆழ்ந்தக் கருத்துகளை அவரது நகைச்சுவை செய்யுளுக்குள் மெருக்கூட்டியவர். என்ற கோடையும் வசந்தமும் கவிதை வரியில் உக்கிர இதயங்களில் நெருப்புப் பந்தங்களை ஏற்றி வைத்தவர். தனக்காக யாரும் வாழ்வதில்லை என பொதுவுடைமை பூவாய் மலர்வோம். தமிழ் ஈழம் வீறுக் கொண்டு வெற்றிக் கொண்டு வாழும் நேரமிது, புறப்படுவோம், புதுயுகம் படைக்க வாருங்கள் இளைய தலைமுறையினரே! படை படையாய் தடையேதும் இல்லாமல் புறப்படுவோம். அமைதியும் சாந்தமும்தான் வாழ்க்கை என்றால் அது எவ்வுயிருக்கும் கிட்டுவதில்லை. போராடுவோம் புதுயுகம் படைத்திடுவோம் என்பதனை இக்கட்டுரை வெளிப்படுகிறது.

## References

Meera, (2019) Kavithaikal Thoguppu, Seethai Pathipagam, Chennai, India.

Meera, (2008) Oosigal, Annam Publication, Thanjavur, India.

Meera, (2009) Kuckoo, Agaram Publication, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License